படிக்கும்போது வரலாறு படித்து விட்டு, எம்.ஏ.யில் தமிழ் எடுத்து படித்திருப்பார். அப்படிப்பட்டவர்களை விட 5 ஆண்டு காலம் தமிழ் புலவர் படிப்பு படித்து வருகிறவர்கள் திறமை சாலிகளாக இருப்பார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை தமிழாசிரியர்களால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, தமிழிலே எம். ஏ. பட்டமும், பின்னர் பி.டி. பட்டமும் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் சர்வீஸ் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா அல்லது பி.ஏ. தமிழில் படித்து விட்டு, எம்.ஏ.யும் தமிழில் படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியராக வேலை பார்க்கும் தமிழ் வித்துவான் அல்லது புலவர் தமிழில் எம்.ஏ.,பி.எட். பட்டம் பெற்றிருந்தால் அதன் அடிப்படையில் முதலிடம் தரப்படுகிறது. உயர் நிலைப் பள்ளிகளில் வித்துவான் அல்லது புலவர் தமிழாசிரியராக இருந்தால் தமிழில் எம்.ஏ., பட்டம் பெற்று தமிழாசிரியர் அல்லது செகண்டரிகிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தால் அவருக்கு இரண்டாம் இடம் தரப்படுகிறது; பி.ஏ. (தமிழ்) படித்து, பின்னால் எம்.ஏ. (தமிழில்) பி.எட். பட்டம் பெற்றிருந்தால் அதற்கு அடுத்த இடம் தரப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக தமிழாசிரியர்கள் என்ற நிலை இருக்கிறது.—அதற்கு முன்னால் எங்களுக்குத் தரவேண்டுமென்று புலவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது.

நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி பதவி

* வினா எண். 850—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி பதவி நீண்ட நாட்களாகவே காலியாக வைக்கப்பட்டிருப்பது உண்மையா?

1979 ஏப்ரல் 27]

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—

(அ) 13—12—78 முதல் பதவி காலியாக இருந்து வந்தது.

(ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தற்காலிக நியமனத்திற்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் மீதான அரசாணை ஒன்று 30—3—79-ல் வெளியிடப்பட்டு, 9—4—1979 முதல் நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பதவி நிரப்பப்பெற்றுள்ளது.

உள்ளாட்சிப் பகுதிகளில் மின் விளக்குகள் பராமரிப்பு

*வினா எண். 851—திரு. யா. சை. மு. யூசுப், திரு. எச். ஜி. ஆறுமுகம், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களின் மின்விளக்கு பராமரிப்பு அந்தந்த ஊராட்சியிடம் தரப்பட்டு உள்ளதால் மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை என அரசிடம் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதை மறு பரிசீலனை செய்து முன்பு போல மின் வாரியத்திடம் ஒப்படைக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) ஆம்.

(ஆ) மறு பரிசீலனை செய்ததில், ஊராட்சிகளே தொடர்ந்து மின் விளக்குகளைப் பராமரிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பேரூராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் பல்பு, டியூப் லைட்கள் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஊத்தங்கரை ஒன்றியத்தில் மாத்தூர் பஞ்சாயத்தில் பலமுறை கேட்ட பின்னாலும் பல்பு, டியூப்கள்கொடுக்கப்படவில்லை. அப்படியே கொடுத்தாலும் மின்சார வாரியத்தில்